இந்திய அரசியலமைப்பு

பகுதி - 12

பகுதி 1 மாநிலங்கள், யூனியன்பிரதேசங்கள் அவற்றின் பரப்பிடங்கள் சரத்து 1 - 4

பகுதி 2 குடியுரிமை சரத்து 5 – 11

பகுதி 3 அடிப்படை உரிமைகள் சரத்து 12-35

பகுதி 4 அரசு நெறிமுறை கோட்பாடுகள் சரத்து 36-51

பகுதி 4A அடிப்படை கடமைகள் (42வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின்படி 1976 ம் ஆண்டு இணைக்கப்பட்டது) சரத்து 51A

பகுதி 5 மத்திய அரசு சரத்து 52-151

பகுதி 6 மாநிலங்கள் சரத்து 152-237

பகுதி 7 1956 ம் ஆண்டு 7 வது சட்டத்திருத்தத்தின்படி நீக்கப்பட்டுவிட்டது.

பகுதி 8 யூனியன்பிரதேசங்கள் மற்றும் மத்திய ஆட்சியப்பகுதிகள் சரத்து 239-241

பகுதி 9 பஞ்சாயத்துகள் சரத்து 243-243O

பகுதி 9A நகராட்சிகள் 243P-243ZG

பகுதி 9B கூட்டுறவு சங்கங்கள் சரத்து 243ZH-243ZT

பகுதி 10 பட்டியல் மற்றும் பழங்குடி பரப்பிடங்கள் சரத்து 244-244A

பகுதி 11 மத்திய மாநில அரசு உறவுகள் வரை சரத்து 245-263

பகுதி 12 நிதி, சொத்து, ஒப்பந்தங்கள் மற்றும் வழக்கிடும் தன்மை சரத்து264-300A

பகுதி 13 வியாபாரம், வணிகம் மற்றும் இந்திய பரப்பு எல்லைகளுக்குள்ளான பரிமாற்றங்கள் சரத்து 301-307

பகுதி 14 மத்திய மற்றும் மாநில அரசுக்கிடையேயான பணிகள் சரத்து 308-323

பகுதி 14A தீர்ப்பாயங்கள் சரத்து 323A-323B

பகுதி 15 தேர்தல்கள் சரத்து 324-329

பகுதி 16 சில வகுப்பினர் தொடர்பான சில சட்டமுறைகள் சரத்து 313-342

பகுதி 17 அலுவலகமொழி சரது 343-351

பகுதி 18 நெருக்கடி காலநிலைகள் சரத்து 352-360

பகுதி 19 பிற வகைமுறைகள் சரத்து 361-367

பகுதி 20 அரசியலமைப்பு சட்டம் சரத்து 368

பகுதி 21 தற்காலிக மாறக்கூடிய மற்றும் சிறப்பு வகைமுறைகள் சரத்து369-392

பகுதி 22 தலைப்பு, அமலாக்கம் சரத்து 393-395

சமச்சமுதாயம், சமயச்சார்பின்மை, ஒருமைப்பாடு ஆகியன முகப்புறையில் 1976ம் ஆண்டு 42 வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்டுள்ளது

நெகிலா அரசியலமைப்பு

பேரா.லைசியன் கூற்றுப்படி, நெகிலா அரசியலமைப்பின் விதிமுறைகளை சாதாரண சட்டங்களைத் திருத்தும் வகைமுறைகளைப் பயன்படுத்தி திருத்த முடியாது.

அரசியலமைப்பு சட்டம் என்பது அரசியலமைப்பில் அடங்கியுள்ள வகையங்களைக் குறிக்கும். சட்டமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்கள் சாதாரணசட்டங்கள் எனப்படும்.

அரசியலமைப்பு சட்டம் சாதாரணசட்டத்தினின்று வேறுபட்டது. இந்திய அரசியலமைப்பின் விதிமுறைகளில் திருத்தம் கொண்டுவருவதற்கு சில விதிமுறைக வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்திய அரசியலமைப்பின் சில வகையங்கள் எளிய முறையில் திருத்தப்படலாம் என்றும், சில வகையங்கள் அவ்வளவு எளிதாக திருத்தம் செய்யப்பட முடியது என்றும் அறியலாம். ஆகவே நம் அரசியலமைப்பு நெகிழும் இயல்பும், நெகிழா இயல்பும் கொண்டுள்ளன.

அடிப்படை உரிமைகள்

இந்திய அரசியலமைப்பின் மூன்றாம் பகுதியில் அடிப்படை உரிமைகள் இடம்பெற்றுள்ளன.

அங்கங்கள் 12-35

இவை தனிமனித முழு வளர்ச்சிக்கு சூழ்நிலைகளை வகுத்துக்கொடுப்பதோடு உண்மையான மக்களாட்சியை அனுபவிப்பதற்கும் உதவிபுரிகின்றன. இந்த உரிமைகள் சட்டத்தின் முன் எல்லா குடிமக்களுக்கும் சமத்துவத்தை வழங்குகின்றன. அடிப்படை உரிமைகள் தனிமனித நலனுக்கும் பொது நலனுக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துகின்றன. இந்திய அரசியலமைப்பு தொடக்கத்தில் 7 அடிப்படை உரிமைகளைக் கொண்டிருந்தது. 1978 ல் 44 வது சட்டத்திருத்தத்தின்படி சொத்துரிமையானது அடிப்படை உரிமையிலிருந்து நீக்கப்பட்டதால் தற்போது 6 அடிப்படை உரிமைகள் மட்டுமெ உள்ளன.

1. சமத்துவ உரிமை. 14-18
2. சுதந்திரத்திற்கான உரிமை 19-22
3. சுரண்டலை தடுப்பதற்கான உரிமை 23-24
4. சமய சுதந்திரத்திற்கான உரிமை 25-28
5. பண்பாடு மற்றும் கல்வி பற்றிய உரிமைகள் 29-30
6. அரசியலமைப்பு வழி தேர்வுகளுக்கான உரிமை 32

அரசு கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள்

இந்திய அரசியலமைப்பின் நான்காம் பகுதியில் அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றன. (அங்கங்கள் 36-51)

பகுதி 4 நாட்டை ஆட்சி செய்வதற்கு அடிப்படையாக இருக்கின்றன.

அரசை நெறிப்படுத்தும் கோட்பாடுகள் வழிகாட்டியாக இருப்பதோடு மட்டுமல்லாமல் சட்டங்கள் இயற்றப்படும்போதும் அடிப்படைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நமது நாட்டில் பொதுநல அரசு அமைப்பதற்கும் இவைகளே வழிகாட்டி.

அரசு கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகளை கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. சமத்துவக் கொள்கைகள்
2. காந்தியக் கொள்கைகள்
3. பன்னாட்டுக் கொள்கைகள்
4. இன்ன பிற கொள்கைகள்

1. சமத்துவக் கொள்கைகள்

குடிமக்களாகிய ஆண்களும் பெண்களும் சரிநிகரான வாழ்க்கைக்கு போதுமான வழிமுறைகளுக்கு உடையவராதல்.

ஒரே மாதிரியான வேலைக்கு ஒரே மதிரியான ஊதியம்

2.காந்தியக் கொள்கைகள்

ஊராட்சிய மன்றங்களை அமைப்பதற்கும் தன்னாட்சி அமைப்புக்கூறுகளாக அவை இயங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும்,ஊரட்சிப் பகுதிகளில் தனிமனித மற்றும் கூட்டுறவு அடிப்படையில் குடிசைதொழில்களை வளர்க்க, பட்டியலில் கண்ட சாதியினர், பழங்குயினர், பிற நலிந்த பிரிவினர் ஆகியோரின் கல்வி பொருளாதார நலன்களை வளர்த்தல். வேளாண்மை, கால்நடை பேணுதல் ஆகியவற்றிற்கான அமைப்பு,. சத்தான உணவின் தரம், பசுக்கள் கன்றுகள் இவற்றை பேணிக்காத்தல்

3. பன்னாட்டுக் கொள்கைகள்

பன்னாடு மக்களிடையே அமைதியை வளர்த்தல், உலக நாடுகளிடையே நேர்மையையும் நன்மதிப்பையும் பெறுதல்,

4. இன்ன பிற கொள்கைகள்

சம நீதியும் இலவச சட்ட உதவியும் செய்தல், குடிமக்களுக்கு ஒரே சீரான உரிமைகள் தொகுப்புச் சட்டம் வழங்குதல்

அடிப்படைக் கடமைகள்

இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் 1976 ல் 42 வது சட்டத்திருத்தம் மூலம் பகுதி 4A ல் 51Aல் சேர்க்கப்பட்டன.

அரசியலமைப்பிற்குக் கீழ்படிந்து குறிப்பிட்ட அதன் அமைப்புகள், நாட்டுக்கொடி, நாட்டுப்பணி இவற்றை மதித்து நடத்தல், நமது நாட்டு விடுதலைப் போரட்டத்திற்கு உணர்வூட்டுதல்,இந்திய நாட்டின் உரிமை ற்றுமை ஆகியவற்றைப் பேணிப்பாதுகாத்தல்

நீதிப்புணராய்வு :-

நமது அரசியலமைப்பு சுதந்திரமான நீதிதுரையை வழங்குகிறது.

இந்திய உச்சநீதி மன்றமும், உயர்நீதி மன்றமும் சட்டங்களை நீதிப்புலனாய்வு செய்யும் அதிகாரம் பெற்றுள்ளன. ஒரு சட்டம் அரசியலமைப்பிற்கு உட்பட்டது (அ) புறம்பானது என்று தீர்ப்பு வழங்கத்தக்க அதிகாரத்திற்கு நீதிப்புலனாய்வு என்றுபெயர்.

வயது வந்தோர் வாக்குரிமை

18வயது நிரம்பிய அனைவரும் வாக்களிக்கலாம்.

மத்திய அரசு

குடியரசுத்தலைவர்

இந்திய குடியரசுத்தலைவர் இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார்.

இந்திய குடியரசுத்தலைவர் அரசின் தலைவர் ஆவார்.

திரு.இராம்நாத்கோவித் அவர்கள் தற்போதைய இந்திய குடியரசுத்தலைவராக பதவிவகித்து வருகிறார்.

தகுதிகள்

அவர் இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்

அவர் 35 வயது முடிந்தவராக இருத்தல் வேண்டும்

அவர் மக்களவை உறுப்பினருக்குரிய தகுதி பெற்றிருக்க வேண்டும்

அவர் அரசாங்கத்தின் ஊதியம் பெறும் எந்த பதவியிலும் இருக்கக் கூடாது.

தேர்தல்

குடியரசுத்தலைவர் பின்வரும் உறுப்பினர்கள் அடங்கிய வாக்காளர் குலாம் மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

1. நாடளுமன்ற இரு அவைகளிலும் உள்ள தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள் மற்றும் மாநிலங்களின் சட்டமன்ற பேரவைகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பெற்ற உறுப்பினர்கள் மூலம்

இந்தியக் குடியரசுத்தலைவர் விகிதச்சார பிரதிநிதித்துவ அடிப்படையில் ஒற்றைமாற்று வாக்கின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

குடியரசுத்தலைவரை தேர்ந்தெடுப்பதில் ரகசிய வாக்களிப்பு முறை கையாளப்படுகிறது.

குடியரசுத்தலைவர் 5 ஆண்டு காலத்திற்கு பதவி வகிப்பார்.

மீண்டும் அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகுதி உடையவர் ஆவார்.

அரசியலமைப்பை மீறிய நடத்தைக்காக குடியரசுத்தலைவர் மீதுபழிகூறப்பட்டு அவரை பதவியிலிருந்து நீக்கலாம். அவரை நாடளுமன்றத்தின் இரு அவைகளில் எதாவது ஒரு அவையால் கொண்டுவரப்படும் குற்றச்சாட்டுகள் மற்ற அவையால் விசாரணை செய்யப்படும். ஒரு அவை குடியரசுத்தலைவரை குற்ற விசாரணை செய்யவேண்டும் என்று தீர்மானம் கொண்டுவர விரும்பினால் 14 நாட்கள் ஆவது முன்னறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னரே அத்தீர்மானத்தை தாக்கல் செய்யமுடியும். இம்முன்னறிவிப்பில் அவையின் மொத்த உறுப்பினரும் 4 ல் ஒரு பகுதியினராவது கையொப்பமிட்டிருக்க வேண்டும். அவையின் தீர்மானம்மொத்த உறுப்பினருள் 3 ல் இரண்டு பகுதி ஒப்புதல் பெற வேண்டும். நாடளுமன்ற இரு அவைகளில் ஒன்றினால் கொண்டுவரப்படும் குற்றச்சாட்டை மறு அவை ஆய்வு செய்தல் வேண்டும். அவ்வவையின் மொத்த உறுப்பினர்களில் 3ல் இரண்டு பங்கிற்கு

குறையாத பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட வேண்டும். அந்தத் தேதியிலிருந்து குடியரசுத்தலைவர் பதவி நீக்கம் செய்யப்படுகிறார்.

இந்திய குடியரசுத்தலைவரின் அதிகாரங்கள்

நிர்வாக அதிகாரம்

சட்டமன்ற அதிகாரம்

நிதிதொடர்பான அதிகாரம்

நீதிதொடர்பான அதிகாரம்

நெருக்கடிநிலைதொடர்பான அதிகாரம்

இந்திய குடியரசுத்தலைவரின் நிர்வாக அதிகாரங்கள்

பிரதமர் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார்

பிரதமரின் ஆலோசனையின் பேரில் மத்திய அரசின் மற்ற அமைச்சர்களையும் குடியரசுத்தலைவர் நியமிக்கிறார்.

குடியரசுத்தலைவர் இந்தியத் தலைமை வழக்கறிஞர், இந்தியக் கணக்காயர், கணக்குதணிக்கையர், இந்தியாவின் தூதுவர்கள், பிரதிநிதிகள், உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மற்ற நீதிபதிகள், உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள், பிற நீதிபதிகள், மநில அளுநர்கள், துணைநிலை ஆளுநர்கள், மத்திய அரசுப்பணி ஆணையத்தின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள்,தலைமைத்தேர்தல் ஆணையர்கள் ஆகியோர்களை நியமிக்கின்றார்.

குடியரசுத்தலைவர் பாதுகாப்புப் படையின் தலைமைத் தளபதியாக விளங்குகிறார்.

தரைப்படை, கப்பற்படை, விமானப்படை ஆகிய முப்படையின் தலைவர்களையும் குடியரசுத்தலைவர் நியமிக்கிறார்.

1976 ல்கொண்டுவரப்பட்ட அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுப்பட்டவர் என்பதை வலியுருத்துகிறது.

44வது சட்டத்திருத்தம் ஒரு மசோதவை மீண்டும் ஒரு அமைச்சரவைக்குமறு பரிசீலனைக்கு திருப்பி அனுப்ப குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைக்குமறு பரிசீலனை செய்து குடியரசுத்தலைவருக்கு அனுப்ப நேர்ந்தால் அவர் அதை ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

குடியரசுத்தலைவரின் சட்டமன்ற அதிகாரங்கள்:-

குடியரசுத்தலைவர் குறைந்தது ஆண்டிற்கு இருமுறையாவது நாடளுமன்றத்தைக் கூட்டவேண்டும்.

குடியரசுத்தலைவர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளையோ (அ) ஏதாவது ஒரு அவையையோ ஒத்திப்போடவோ (அ) கூட்டங்களை முடிவுக்குக் கொண்டுவரவோ அதிகாரம் பெற்றிருக்கிறார்.

மக்களவையை கலைப்பதற்கும் குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

குடியரசுத்தலைவர் மாநிலங்கலவையின் 12 உறுப்பினர்களை நியமனம் செய்வார்.

இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூகசேவை ஆகியதுறைகளிலிருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவார்கள்.

ஆங்கிலோ இந்திய சமூகத்தினருக்கு போதுமான பிரதிநிதித்துவ மக்களவையில் கிடைக்கப்பெறவில்லையென குடியரசுத்தலைவர் கருதினால் அச்சமூகத்திலிருந்து இரண்டு அங்கத்தினர்களை மக்களவைக்கு நியமனம் செய்வார்.

குடியரசுத்தலைவரின் அங்கீகாரமும் கையொப்பமும் இல்லாமல் எந்தமசோதவும் சட்டம் ஆகாது.

நாடளுமன்றம் கூடாத காலங்களீல் அவசரச்சட்டம் பிறப்பிக்க குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

குடியரசுத்தலைவர் நிதி தொடர்பான அதிகாரங்கள்

குடியரசுத்தலைவரின் முன் அனுமதியின்றி நிதிமசோதவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாது.

இந்திய அரசியலமைப்பு எதிர்பாரச் செலவுநிதியை குடியரசுத்தலைவர் பொறுப்பில் ஒப்படைத்துள்ளது.

அவர் நாடாளுமன்ற இறுதி ஒப்புதலை எதிர்நோக்கி அவசரமாக எற்படும் செலவினங்களுக்கு இத்தொகுப்பிலிருந்து முன்பணம் வழங்குவார்.

குடியரசுத்தலைவர் நிதி ஆணயத்தை நியமிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார்.

நீதி தொடர்பான அதிகாரங்கள்:-

குற்றாவாளிகளை தண்டிக்கவோ, தண்டனையை நிறுத்தி வைக்கவோ, குறைக்கவோ குடியரசுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

அரசியலமப்பு குறித்தும் சட்டங்கள் குறித்தும் சந்தேகமோ சிக்கலோ ஏற்பட்டால் குடியரசுத்தலைவர் உச்சநீதி மன்றத்தின் ஆலோசனையைக் கேட்கலாம்.

நெருக்கடிநிலை தொடர்பான அதிகாரங்கள்:-

நெருக்கடிநிலை தொடர்பான அதிகாரங்கள் குடியரசுத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அவர் கீழ்க்காணும் நேரங்களில் நெருக்கடிநிலையை அறிவிக்கலாம்.

தேசிய நெருக்கடி நிலைமை - சரத்து 352.

மாநில நெருக்கடி நிலைமை - சரத்து 356.

நிதி நெருக்கடி நிலைமை - சரத்து 360.

இந்திய துணைக்குடியரசுத்தலைவர்

இந்திய துணைக்குடியரசுத்தலைவர் தமது பதவியின் வழியாக மாநிலங்களவையின் தலைவராக பொறுப்பேற்பார்.

குடியரசுத்தலைவர் பதவி அவரது மரணத்தாலோ, பதவி விலகலாலோ, பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ காலி இடம் ஆகுமானால் துணைக்குடியரசுத்தலைவர் குடியரசுத்தலைவராகப் பொறுப்பேற்று புதிய குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரை பதவி வகிப்பார்.

மற்றும் குடியரசுத்தலைவர் நோய் (அ) பிற காரணாத்தாலோ

இந்திய துணைக்குடியரசுத்தலைவரின் தகுதிகள்

அவர் இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்

அவர் 35 வயது முடிந்தவராக இருத்தல் வேண்டும்

மாநிலங்கலவையின் உறுப்பினருக்குரிய தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்

அவர் அரசாங்கத்தின் ஊதியம் பெறும் எந்த பதவியிலும் இருக்கக் கூடாது.

துணைக்குடியரசுத்தலைவர் தேர்தலைப் பற்றி

துணைக்குடியரசுத்தலைவர் நாடாளுமன்றா இரு அவைகளில் அங்கத்தினர்களைக்கொண்ட வாக்காளர் குலாம் மூலமாக விகிதாச்சார பிரதிநிதிதுவ அடிப்படையில் ஒற்றைமாற்று வாக்கின்மூலம் தேர்ந்தெடுக்கபப்டுகிறார்.

துணைக்குடியரசுத்தலைவர் தேர்ந்தெடுக்க ரகசிய வாக்கெடுப்புமுறை பின்பற்றப்படுகிறது.

பதவிக்காலம்:-

துணைக்குடியரசுத்தலைவர் 5 ஆண்டு காலத்திற்குப் பதவி வகிப்பார்.

மீண்டும் அந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்ப்டுவதற்கு தகுதி உடையவர் ஆவார்.

துணைக்குடியரசுத்தலைவர் தம் 5 ஆண்டு காலத்திற்குள் தம் பதவியிலிருந்து விலகிக்கொள்ளலாம்.

துணைக்குடியரசுத்தலைவர் மாநிலங்களவையின் அனைத்து உறுப்பினர்களில் பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்ட பதவி நீக்கத்தீர்மானம் மக்களவையால் ஏற்றுக்கொள்ளமேயானால் பதவியிலிருந்து அகற்றாப்படுவார்

ஆனால் 14 நாட்களுக்குக் குறையாமல் முன்னறிவிப்பு கொடுத்தல் வேண்டும்.

இந்திய குடியரசுத்தலைவர்	பதவிக்காலம்
Dr. இராஜேந்திரப்பிரசாத்	26.1.1950-13.5.1962
Dr.இராதாக்கிருஷ்ணன்	1963-1967
Dr.ஜாகிர் உசேன்	1967-69
வராககிரி வேங்கடகிரி	1969-1969
நீதிஅரசர் முகமது இதயதுல்லா	1969-1969
வராககிரி வேங்கடகிரி	1969-1974
Dr. பக்ருதீன் அலி முகமத்	1974-77
பி.டி. ஜாட்டி	1977-77
நீலம் சஞ்சீவிரெட்டி	1977-82

இராஜேந்திரப்பிரசாத்

காந்தியவாதி சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத்தலைவர் பதவி வகித்த காலம் 1950-1962. 1962 ம் ஆண்டு பாரத ரத்னா விருது பெற்றவர் இவர்.

Dr.இராதாக்கிருஷ்ணன்

தத்துவஞானி, அறிவாளார், எழுத்தாளர், இந்தியாவின் முதல் துணைக்குடியரசுத்தலைவர் இவர். 2 வது குடியரசுத்தலைவர் 1962-67.

இதற்கு முன்பு இவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பேரசிரியர், தலைவராகப் பணியாற்றியிள்ளார்.

ஐ.நா கல்வி, சமூக மற்றும் பன்பாட்டுக்கழகம் 1954 ல் பாரத ரத்னா விருது பெற்றவர்.

Dr.ஜாகிர் உசேன்

தேசியவாதி மற்றும் கல்வியாளர். 2வது துணைக்குடியரசுத்தலைவர்.

3 வது குடியரசுத்தலைவர் 1967-69

1963 ல் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டார்.

வராககிரி வேங்கடகிரி 1969-1969

3வது துணைக்குடியரசுத்தலைவர்.

4 வது குடியரசுத்தலைவர்.

1975 பாரத ரத்னா விருது

முகமது இதயதுல்லா

சட்ட வல்லுனர், துணைக்குடியரசுத்தலைவர் 1974-89

உச்சநீதிமன்றாத்தலைமை நீதிபதி.

Dr. பக்ருதீன் அலி முகமத்

5 வது குடியரசுத்தலைவர். இந்திய சுதந்திரப்போரட்டத்தில் முக்கியப் பங்குவகித்தார்.

பி.டி. ஜாட்டி

துணைக்குடியரசுத்தலைவர் 1974-79.

பொறுப்பு குடியரசுத்தலைவர் 1977. முதலமைச்சர் மைசூர் மற்றும் ஆளுநர் ஒரிசா.

பிரதம அமைச்சர்

பிரதம அமைச்சர் தான் அரசாங்கத்தின் தலைவர். இவர் தான் நிர்வாகத்துறையின் தலைவரும் ஆவார்.

குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார்.

குடியரசுத்தலைவர் மக்களாவையில் பெறும்பான்மையான கட்சியின் தலைவரை அழைத்து பிரதமாராக நியமித்து அமைச்சரவை அமைக்குமாறு கேட்டுகொள்வார்.

பெறும்பான்மையான கட்சியின் தலைவர்

காபினேட்டின் தலைவர்

நாடாளுமன்றத்தின் தலைவர்

குடியரசுத்தலைவருக்கும் அமைச்சரவைக்கும் இணைப்புப் பாலமாக திகழ்பவர்.

குடியரசுத்தலைவருக்கும் நாடளுமன்றத்திற்கும் இணைப்புப் பாலமாக திகழ்கபவர்.

நாட்டின் முதன்மையான பிரதிநிதி.

நாட்டின் நிர்வாகத்தினை நடத்திக்கொடுக்கும் பொறுப்புடையவர்

பன்னாட்டு அவை நடத்துவதில் பொறுப்புடையவர்

பிரதம அமைச்சர் அமைச்சக வலைவின் அடிப்படைக்கல் என்றும் சமமானவர்களில் முதலானவன் என்றும் விவரிக்கப்படுகிறார்.

அரசாங்கம் முழுமை அமைப்பிற்கும் பிரதம அமைச்சர் ஒரு அச்சாணி என்று பேரா. லார்டுலாஸ்கி கிறிப்பிடுகின்றார்.

பிரதமர் ஒரு ஞயிறு பொன்றாவர் என்றும் அஞ்ஞாயிற்றை மற்ற கிரகணங்கள் எங்கணம் சுற்றி வருகின்றதோ அங்கணாமே ஏனைய அமைச்சர்கள் அனைவரும் பிரதமரை சுற்றி சுழழ்கின்றனர் என்று சர் ஐவர் ஜென்னிங்ஸ் அரசியல் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

காபினேட்டின் அம்சங்கள்

காபினேட் என்பது நாடளுமன்ற குழு என்று அழைக்கப்படுகிறது.

செயலாட்சிக்குழுவையும் சட்டமன்றத்தையும் சேர்த்து வைக்கிறது.

காபினேட் செயலாட்சிக்குழுவையும் சட்டமன்றத்தையும் இணைக்கும் ஒரு சங்கிலி போன்றது என்று வால்டர் பேஜாட் குறிப்பிடுகிறார்.

அமைச்சரவை

பிரதம அமைச்சரது தலைமையிலான ஒரு அமைச்சரவைக்கு இந்திய அரசியலமைப்பு வகைசெய்கிறது.

அது குடியரசுத்தலைவருக்கு அவருடைய பணியை ஆற்றுவதில் துணைபுரிந்து ஆலோசனைகளை கூறும்.

அமைச்சர்கள் மக்களவைக்கு தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்புடையவர்கள்.

சாதாரணமாக அமைச்சர்கள் இரு வகையாகப்பிரிக்கப்படுகிறார்கள்.

1. காபினேட் அமைச்சர்

2 மாநில அமைச்சர்.

மக்களவை மற்றும் மாநிலங்களவை:

இந்திய அரசியலமைப்பின்படி மக்களவைக்கு அந்த உறுப்பினர்கள் இருவரை முறையே தலைவராகவும் துணைத்தலைவராகவும் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

மக்களவைத்தலைவரின் பதவி காலியக இருக்குமேயானால் அப்பதவிக்குரிய கடைமைகளை அவைத்துணைத்தலைவர் புரிந்துகொண்டுவருதல் வேண்டும்

இந்திய குடியரசுதுணைத்தலைவர் தம் பதவி வழியில் மாநிலங்களவை தலைவராக இருப்பார்.

மாநிலங்களவை அந்த அவையின் உறுப்பினர்கள் ஒருவரை அந்த அவையின் துணைத்தலைவராக தேர்ந்தெடுத்தல் வேண்டும்

இந்தியாவின் மக்களவைத்தலைவர் பதவி கிட்டத்தட்ட காமன் சபை போன்றது.

மக்களவைத்தலைவர் பதவி அதிகாரமும் கௌரவமும் உடையது ஆகும்

மக்களவையின் தலைவர் வாக்கெடுப்பின் முடிவில் வாக்குகள் சமமாக அமையும் போது மட்டுமே வாக்களிப்பர். இதற்கு costing ஓட்டு என்று பெயர்.

இரு அவைகளுக்கிடையே சட்டமியற்றுவதற்கான கருத்து வேறுபாடு தோன்றும் போது இரு அவைகள் கூடும் போது மக்களவைத்தலைவர் தலைமைதாங்குவார்.

நாடளுமன்றம்:

மாநிலங்களவை(ராஜ்ய சபா)

இந்திய நாடளுமன்றம் இந்திய குடியரசுத்தலைவரையும் மநிலங்கலவை மக்களவை எனப்படும் இரண்டு அவைகளைக்கொண்டுள்ளது.

மாநிலங்களவை 250 கும் மிகாத உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

இதில் 12 பேர் இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூகசேவை இவற்றில் சிறந்த அறிவு உள்ளவர்களை குடியரசுத்தலைவர் உறுப்பினராக நியமிக்கப்படுவார்.

மீதமுள்ள 238 உறுப்பினர்கள் வெவ்வேறு மாநிலங்களிலிருந்தும் யூனியன்பிரதேசங்கள் உட்பட அந்தந்த மாநிலங்களிலிருந்தும் மக்கள்தொகைக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

மாநிலங்களின் அவைக்கான தேர்தல் மறைமுகமானது.

மாநிலங்களவை தலைப்பிற்குள்ளாவதில்லை. 3ல் ஒரு பங்கு உறுப்பினர்கள் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை பதவி விலக மீண்டும் தேர்தல் நடைபெறும்.

உறுப்பினர்கள் 6 ஆண்டுகாலம் பதவி வகிப்பார்கள்.

மக்களவை(லோக் சபா)

மக்களவை 552 கும் மிகாத உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

530 மாநிலங்களிலிருந்தும் 20 உறுப்பினர்கள் யூனியன் பிரதேசங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ஆங்கிலோ இந்திய சமூகத்தினருக்கு மக்களவையில் போதுமான பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறவில்லையென குடியரசுத்தலைவர் கருதுவாராயின் அவர் அச்சமூகத்தினரை உறுப்பினர்களாக நியமிப்பார்

மாநிலங்களின் மக்கள்தொகைக்கு இணங்க உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கணக்கிடப்படுவார்கள்

தற்போது மக்களவை 432 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது

இடையில் கலைக்கப்படவில்லையெனில் மக்களவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்

இருப்பினும் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தும்போது காலங்களில் மக்களவையின் காலத்தில் ஓரண்டுக்கு மேற்படாமலும் நெருக்கடி நிலையில் 6 மாதத்திற்கு மேற்படாமலும் சட்டத்தினால் நீடிக்கலாம்.

மக்களவையின் தலைவர் முதல் கூட்டத்தில் அவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். மற்றும் அவை ஒரு துணைதலைவரையும் தேர்ந்தெடுக்கும்.

தலைவர் இல்லாத காலங்களில் அவைத்தலைவராக பொறுப்பேற்று துணைத்தலைவர் அவையை நடத்திக்கொடுப்பார்

நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு ஒருவர் இந்திய குடிமகனாக இருத்தல் வேண்டும்.

மாநிலங்களவையின் உறுப்பினர்கள் 30 வயதுக்கு குறையாமலும் மக்களவையின் உறுப்பினர்கள் 25 வயதுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்

கூடுதல் தகுதிகள் அவ்வப்போது நாடாளுமன்றத்தினால் சட்டத்தின்மூலம் அறிவிக்கப்படும்

மக்களவைக்குரிய உறுப்பினர் நாட்டின் எந்தத் தொகுதியிலிருந்தும் போட்டியிட்டு தேர்ந்தெடுக்கப்படலாம்

மாநிலங்களவையின் அங்கத்தினர் ஆவதற்கு ஒருவர் எந்த மாநிலத்திலிரிந்து தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அந்த மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளராக இருத்தல் வேண்டும்

நாடளுமன்ற கூட்டத்தொடர்கள்

அரசியலமைப்பின்படி நாடாளுமன்றம் ஒரு ஆண்டில் குறைந்தது 2 முறை கூட்டப்பட வேண்டும்

இரண்டு கூட்டங்களுக்கும் இடையில் 6 மாதங்களுக்கு மிகாமல் இடைவெளி இருக்கும் வகையில் குடியரசுத்தலைவர் நாடளுமன்றத்தைக் கூட்ட ஆனையிடுவார்

நடைமுறையில் நாடளுமன்றம் ஆண்டிற்கு 3 முறை கூட்டப்படுகிறது

1. வரவு செலவு அறிக்கைத்தொடர்

பொதுவாக பிப்ரவரி மாதத்தில் கூடும்

2. பருவகால கூட்டத்தொடர்

பொதுவாக ஜூலை மாதத்தில் கூடும்

3. குளிர்கால கூட்டத்தொடர்

பொதுவாக நவம்பர் மாதத்தில் தொடங்கி நடைபெறும்

முதல் கூட்டத்தொடரில் அதாவது வரவு செலவு அறிக்கை கூட்டத்தொடரில் நாடளுமன்ற இரு அவைகளையும் கூட்டி குடியரசுத்தலைவர் உரை நிகழ்த்துவார்

இந்த கூட்டத்தொடரிலேயே வரவு செலவு மற்றும் பொது வரவு செலவு விவாதம் நடத்தி அவை ஏற்றுக்கொள்ளப்படும்

சட்டம் இயற்ற நாடளுமன்ற இரு அவைகளின் ஒப்புதலைப் பெற வேண்டும்

இருப்பினும் நிதி மசோதவைப்பொருத்தவரை மக்களவையின் ஒப்புதலே முடிவானது

நிதிமசோதக்கள் மாநிலங்களவையினால் 14 நாட்கள் மட்டுமே தாமதப்படுத்தப்படலாம்

உச்சநீதி மன்றம்

இந்திய உச்சநீதி மன்றம் ஒரு தலைமைநீதிபதியையும் மற்றும் 25 நீதிபதிகளையும் கொண்டிருக்கும்

தலைமை நீதிபதியும் மற்ற நீதிபதிகளும் குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள்

நீதிபதிகளை நியமிக்கும் போது குடியரசுத்தலைவர் உச்சநீதி மன்றத்தின் தலைமைநீதிபதியை கலந்து ஆலோசித்து முடிவெடுப்பார்

அரசியலமைப்பின்படி உச்சநீதிமன்ற நீதிபதிக்கு பின்வரும் தகுதிகள் அவசியம் எனக் கருதப்படுகிறது.

அவர் இந்தியாவின் குடிமகனாக இருத்தல் வேண்டும்

ஓர் உயர்நீதிமன்றத்திலோ இரண்டு (அ) அவற்றிற்கு மேற்பட்ட நீதிமன்றங்களிலோ 5 ஆண்டுகளுக்கு குறையாமல் நீதிபதியாக இருந்தவராக இருத்தல் வேண்டும் (அ) ஓர் உயர்நீதி மன்றத்திலோ இரண்டு (அ) அவற்றிற்கு மேற்பட்ட நீதிமன்றங்களிலோ குறைந்தது 10 ஆண்டுகள் வழக்கறிஞராக இருந்தவராக இருத்தல் வேண்டும் (அ) குடியரசுத்தலைவர் கருத்தின் படி தனிச்சிறப்புவாய்ந்த சட்டவியல் நிபுனராக இருத்தல் வேண்டும்

உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள் 65 வயது வரை நிரைவு பெறும்வரை பதவி வகிப்பர்கள்

உயர்நீதிமன்றத்தின் தலைமையிடம் டில்லியில் உள்ளது. இருப்பினும் இந்தியாவின் தலைமை நீதிபதி இந்தியக் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெற்று நீதிமன்றத்தை பிற இடத்திலோ (அ) இடங்களிலோ தற்காலிகமாகக் கொண்டு செயல்படுத்தலாம்

உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பு

1. முதலேட்பு அதிகார வரம்பு
2. மேல்முறையீட்டு அதிகார வரம்பு
3. ஆலோசனை அதிகார வரம்பு
4. நீதிபேரானை அதிகார வரம்பு
5. இன்ன பிற அதிகார வரம்பு

இந்திய அரசியலமைப்பின் விதி 32 வழங்கப்படும் உரிமை மனிதனில் இருதயமும் உயிர்சக்தியும் ஆகும்

சட்ட அலுவலர்கள் மற்றும் மத்திய செயலி

மத்திய அரசு தலைமை வழக்கறிஞர் மேற்கூறப்பட்ட அலுவலர்கள் அனைவரும் அரசியல் சட்டவிதி 76 ன் படி குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார்

இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் துறையை சார்ந்த அலுவல்கள் கடமைகள் நடைமுறைகள் அவற்றைப்பற்றிய சட்டப்பூர்வ நிலைமையைப்பற்றி தேவைபடும்போதோ (அ) கேட்டுக்கொள்ளும்போதொ குடியரசுத்தலைவருக்கு ஆலோசனை கூறும்பணியை செய்கிறார்கள்.

பொது வழக்கறிஞர் இந்திய வழக்குகளில் சட்டம் சம்பந்தமான துறையின் மிக உயர்ந்தவர் ஆவார்

அவருடைய பணிகளை நிறைவேற்றுவதற்கு(அ) பணிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரணை நடைபெறும்போது அவை எத்தகைய நீதிமன்றமேயானாலும் அங்கு தானே நேரில் ஆஜராகி விசரனையில் உதவுவதற்கு அனுமதியும் உரிமையும் உடையவர்

பொது வழக்கறிஞர் குடியரசுத்தலைவருடைய விருப்பம் உள்ளவரே பதவியில் இருப்பார்

அவர் அனுமதிக்கும் ஊதியத்தை அவ்வப்போதுபெறுவார்

பொது வழக்கறிஞரை அடுத்து இன்னும் ஒரு அரசு வழக்குக் குறிப்புகள் தயாரிப்பவர் அவரும் உள்ளார்

பிரெஞ்சு அறிஞரான ட்ரேசி என்பவரால் கருத்தியல் என்பது சொல்லாக்கம் செய்யப்பட்டது.

மக்களுடைய லட்சியங்கள் உறுதிப்பாடுகள் நம்பிக்கைகள் மற்றும் கருத்துகள் ஆகியவற்றின் தொகுப்பினை கருத்தியல் குறிப்பிடுகிறது

இந்திய தேசிய காங்கிரசு:

இந்திய தேசிய காங்கிரசு மிகப் பழமையான அரசியல் கட்சி அது ஏ.ஓ. க்யூம் என்பவரால் 1885 ம் டிசம்பர் திங்கள் 28 ம் நாளில் நிறுவப்பட்டது

காங்கிரஸ் கட்சியின் வரலாறு சுதந்திரப்போரட்டத்தின் வரலாறாக உள்ளது

அரசியல் சுதந்திரம் என்னும் பொதுவான குறிக்கோளை அடையும் பொருட்டு பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் காங்கிரஸ் கட்சியின் கீழ் அணிதிரண்டனர்.

எனவே பிரிட்டிஸ் காரர்கள்1947 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ம் நாட்டையும் அதிகாரத்தையும் காங்கிரசிடம் ஒப்படைத்தனர். அந்த நாள் முதற்கொண்டு இரண்டு இடைவெளிகளை குறுகியகாலத்தைத் தவிர்த்து 70 ஆண்டுகளாக காங்கிரஸ் அதிகாரத்திலிருந்து வருகிறது

1967 ம் ஆண்டு வரை ஏறத்தாள இந்திய மாநிலங்களிலும் அதிகாரத்தில் இருந்தது.

காங்கிரஸ்

இந்திய தேசிய காங்கிரஸ்ன் தேர்தல் சின்னம் கை ஆகும்.

காங்கிரசின் அமைப்பு

காங்கிரஸ் கட்சியின் தற்போதைய அமைப்பு1920 ம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற கூட்டத்தொடரில் வடிவமைக்கப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பின்னர் காங்கிரஸ்ன் கொள்கையிலும் செயல்திட்டத்திலும் ஒரு மாற்றம் ஏற்பட்டது. வகுப்பு (அ) வர்க்கபேதமற்ற மக்கள் சமுதாயம் ஒன்றினை அமைக்கும் குறிக்கோள் 1955 ல் அறிவிக்கப்பட்டது. இக்குறிக்கோளுக்கென காங்கிரஸ் கட்சியின் கூட்டுத்தொடரில் சமதர்ம பாங்கிலான தீர்மானம் ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளில் 1990 ம் ஆண்டு முதல் தீவிரமாற்றம் ஏற்பட்டன. பிரத்ம அமைச்சர் திரு.பி.வி. நரசிம்மராவ் தலைமையிலான அரசாங்கம் முக்கியமான சில பொருளாதார சீர்திருத்தங்களை ஆரம்பித்திருந்தது.

இந்திய பொதுவுடைமை கட்சி

இந்தியாவில் மிகப் பழமைவாய்ந்த இரண்டாவது கட்சியாக பொதுவுடமை கட்சி திகழ்கிறது. 1924 ம் ஆண்டில் அது நிறுவப்பட்டது. ஆனால் அது நிறுவப்பட்ட பிறகு உடனடியாக பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டது. இதன் விளைவாக பெருவாரியான பொதுவுடைமை கட்சி தொண்டர்கள் காங்கிரசின் வாயிலாக தமது பணியினை தொடர்ந்து

ஆற்றினர். 1942 ல் நடைபெற்ற வெள்ளையனே வெளியேறு இயக்கத்தினை தொடங்கியதாலும் உலகப்போரை ஆதரித்த காரணத்தாலும் பொதுவுடமை கட்சியின் மீது விதிக்கப்பட்ட தடை 1943 ல் நீக்கப்பட்டது. இந்திய பொதுவுடைமை கட்சியின் அமைப்பு 1908 ல் அமிர்த சரசில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

போர் புரட்சி மற்றும் தீவிர கருத்தை பட்டியலிடும் பொருட்டு கட்சியின் அரசியலமைப்பு மாற்றம் செய்யப்பட்டது. பொதுவாக கட்சியின் துவக்க நிலை அமைப்பு கிளை என்று அழைக்கப்படுகிறது.

மார்க்கீசிய இந்திய பொதுவுடைமைக் கட்சி

இந்திய பொதுவுடைமைக் கட்சி 1964 ம் ஆண்டில் பிளவுண்டது.

சீன ரஷ்ய உறவுகளின் உள்கட்சி பிளவு இந்திய பொதுவுடைமைக் கட்சி

உடைந்ததற்கு காரணமாய் அமைந்தது. பொதுவுடைமை (அ) கம்யூனிசிய தலைவர்கள் நாட்டில் நிலவிய அரசியல் பொருளாதார நிலவரங்களை மதிப்பீடு செய்வதில் கருத்து வேற்றுமைகளை கொண்டிருந்தனர். பல பிரச்சினைகளுக்குப் பிறகு இறுதியாக மாற்றுக்கருத்து கொண்டோர் மாநாட்டை தெனாலி எனும் இடத்தில் 1964 ம் ஆண்டு ஜுலை திங்களில் நடத்தினர். அவர்கள் இந்திய பொதுவுடைமைக் கட்சியின் டாங்கே அணியிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டனர். ஜோதிபாசு, ஈ.எம்.நம்போதிரிபாடு போன்ற தலைவர்களும் மற்றவர்களும் இந்திய மார்க்கீசிய பொதுவுடைமைக் கட்சி

என்ற பெயரில் புதியதொரு கட்சியை அமைத்தனர்.